# ஆவி உலகம் !

## PV. Jesudas

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

பறக்கும் தட்டுகள் அநேக இடங்களிலே சில வருஷங்களாக வந்து போய் கொண்டிருக்கிறது. இந்த பறக்கும் தட்டுகள் ஏராளமாக அமெரிக்க நாட்டிலே வந்தது.




ஏன் அந்த நாட்டிலே மாத்திரம் வந்தது என்று, இன்று வரை நமக்கு புரியவில்லை. அந்த பறக்கும் தட்டுகளைபற்றி ஆராய்ந்து பார்க்க அநேகர் முயன்றார்கள். அமெரிக்கர்கள் மட்டும் 1500 முறை இந்த பறக்கும் தட்டுகளை பார்த்திருக்கிறார்கள். ஆகவே அமெரிக்கன் அரசு, இந்த பறக்கும் தட்டுகளை பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக, ஒரு விஞ்ஞானிகளின் குழுவை நியமித்து, சில தகவல்களை வெளியிட் டார்கள்.

ஒரு முறை பறக்கும் தட்டுகளை, அமெரிக்க போர்விமானம் விரட்டிச்சென்று, அது என்னவென்று பார்க்க மிக வேகமாகபோனது, அந்த பறக்கும் தட்டுகள் இந்த விமானத்தை விட மிக அதிக வேகமாக



போய்விட்டது.

இன்னொரு சமயத்திலே அநேக அமெரிக்க விமானங்கள், அந்த பறக்கும் தட்டுகளை சமீபித்தபோது, அவைகள் இவர்கள் வருவதை பார்த்து தங்கள் வேகத்தை குறைத்து கொண்டது. அது என்னவென்று பார்க்க அமெரிக்கர்கள் சமீபித்து பார்த்தபோது, அந்த போர் விமானங்கள் அந்த இடத்திலேயே நின்றுவிட்டது. போர் விமானங்களின் கருவிகள் யாவும் நின்றுவிட்டது.



ஆகவே அந்த பறக்கும் தட்டுகள் பறந்துசெல்ல, இந்த அமெரிக்க போர்விமானங்களும் அவைகளோடு காந்த சக்திபோல இழுத்துசென்றது. பிறகு அந்த பறக்கும் தட்டுகள் இவைகளை விட்டு வேகமாக போய்விட்டது.

இப்படிப்பட்ட அநேக காரியங்கள் இந்த உலகத்தில் நடக்கிறது. அநேகர் இப்படிப்பட்ட காரியங்களை நம்புகிறார்கள். மற்ற உலகத்தில் மக்கள் வாழ்கிறார்கள், அவர்கள் நம்மை விட அதிக ஞானமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணம், இன்று விஞ்ஞானிகள் மத்தியிலே இருந்து வருகிறது. அப்படியானால் இப்படிப்பட்ட காரியங்களின் பொருள் என்ன?

ஆண்டவருக்கு இந்த உலகம் மட்டும் கிடையாது. இன்னும் ஏராளமான உலகம் இருக்கிறது. அந்த மற்ற உலகங்களிலே மக்கள் வாழ்வு இருக்கிறது என்று வேதம்

சொல்லுகிறது. அந்த மற்ற உலகத்தில் இருக்கிற மக்கள் நம்மை வந்து பார்க்கமுடியாது.

–2–

நாமும் அவர்களை பார்க்கமுடியாது. ஏனென்றால் நாம் பாவம் செய்ததினால், நாம் அவர்களை பார்க்க முடிவதில்லை.

இந்த உலகத்தின் பாவம் மற்ற உலகத்தில் பரவகூடாது என்பதற்காக, ஆண்டவர் நமக்கும் அவர்களுக்கும் தடை விதித்து விட்டார்.

**எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப் பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக் கையானோம். -1கொரிந்தியர் 4:9.**

இங்கு மனுஷருக்கும் வேடிக்கையானோம் என்றால் மற்ற உலகத்தாருக்கும் வேடிக்கையானோம் என்று குறிக்கிறது.

**நீ கழுகைப்போல உயரப்போனாலும் நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேனென்று கர்த்தர் சொல்லுகிறார், - ஒபதியா 4**

மனிதர்கள் நட்சத்திரங்களுக்குள்ளே தங்களுடைய வீடுகளை கட்டு வார்கள் என்று வேதம் முன்னதாகவே சொல்லிவிட்டது.

**அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடகம் இரத்தமயமாகும்; அவனுடைய யுத்தவீரர் இரத்தாம்பரந் தரித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் ஜுவாலிக்கிற கடகங்களை உடையதாயிருக்கும்; ஈட்டிகள் குலுங்கும். இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும்; அவைகள் தீவட்டிகளைப்போல விளங்கி, மின்னல்களைப்போல வேகமாய்ப் பறக்கும். - நாகூம் 2:3,4.**

இங்கு விமானத்தையும், ராக்கெட்டை பற்றியும் வேதம் கூறுகிறது. பலவிதமான வெற்று உலகங்களுக்கு, மனிதர்கள் ராக்கெட்டுகளில் போய் வீடு கட்டுவார்கள் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே மற்ற உலகத்தார்கள் நம் உலகத்திற்கு வந்து போக ஆண்டவர் அனுமதிக்க வில்லை.

## இந்த பறக்கும் தட்டுகளில் வரும் மனிதர்கள் யார் ?

இவர்கள் மனிதர்களும் அல்ல, மற்ற உலகத்தினரும் அல்ல, பின்னே இவர்கள் யார் என்பதை பார்க்கும் முன்பு, சாத்தானைப் பற்றி நாம் சற்று ஆராயவேண்டும்.

**வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்**

–3–

**தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். Tவெளி. 12:7,8,9.**

பிசாசும் மூன்றில் ஒரு பங்கான தேவதூதர்களும், இந்த உலகத்தில் வந்து விழுந்தார்கள். இந்த பிசாசுகளுடைய ஏராளமான ஏமாற்றங்கள், இந்த உலகத்தில் இன்னமும் இருக்கிறது. மனிதருக்கு என்றன்றைக்கும் வாழவேண்டும் என்ற ஒரு ஆசையுண்டு. மரிக்க வேண்டுமென்று எந்த மனிதனும் நினைப்பதில்லை. அவன் துன்பப்படும்போது தற்கொலை செய்துக்கொள்ள விரும்புகிறானே தவிர அவன் சந்தோஷமாயிருக்கும்போது மரிப்பதற்கு விரும்ப மாட்டான்.

மரணத்தை பற்றி மனிதனுக்கு பயமும் வெறுப்பும் இருக்கதான் செய்கிறது. மக்கள் மரிக்கும்போது உறவினர்களும் வீட்டாரும் விசனமுள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள். கண்ணீரும் துக்கமும் அடைகிறார்கள். அந்த துக்கத்தோடு மரித்தவர்களை திரும்ப பார்ப்பது எப்படி? அவர்களோடு இனி பேசமுடியாதே! பார்க்க முடியாதே! என்று கவலைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பெரிய ஏக்கம் மனுகுலத்தின் மக்களுக்குள்ளாக இருக்கிறது. இப்படியிருக்க இந்த காரியங்களை சாத்தான் உபயோகித்து மக்களை ஏமாற்றத்தக்கதாக, பல தந்திரமான வேலைகளை செய்து வருகிறான். இந்த ஏமாற்றத்தை பற்றி நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த மனிதனும் மரிக்க வேண்டும் என்று ஆண்டவர்விரும்புவதில்லை. மனிதர்கள் என்றன்றைக்கும் வாழ வேண்டும் என்பதுதான் ஆண்டவருடைய திட்டம்.

**தேவன் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார் என்றார். -மத்தேயு 22:32.**

**மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. -1கொரிந்தியர் 15:21.**

**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் நித்தியஜீவன்.** ரோமர் 6:23

மனிதனே மரணத்திற்கு காரணமாயிருக்கிறான். மனிதன் மரிக்கும்போது, ஆண்டவர் மனிதனைப் பார்த்து கண்ணீர்

விடுகிறார். மனிதனை இந்த மரண சாபத்திலிருந்து காப்பாற்ற தன்னையே ஒப்புக்கொடுத்தார்.

எவ்வளவோ எச்சரிப்புகளை கொடுத்து வருகிறார். அவருடைய சத்தத்திற்கு செவிக்கொடுத்தோமென்றால், நாமும் அவரைபோல சாவாமையை தரித்துக் கொண்டு என்றும் வாழ்வோம். ஏனெனில், **கர்த்தர்** தாமே ஆரவாத்தோடும், பிரதான

–4–

**தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். -** 1 தெச. 4:16,17.

**இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்;** யோவான் -5:28

யார் அவருக்கு கீழ்ப்படிந்தார்களோ அவர்கள் முதலாவது எழுந்தி ருப்பார்கள்.

**இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம்.**

-1கொரிந்தியர் 15:51.

ஒரு சந்ததி வருகிறது, அதற்கு 60 அல்லது 70 வருஷத்தை ஆண்டவர் கொடுக்கிறார். அந்த வருஷங்களிலே அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடந்தார்களா? இல்லையா? அவர்தான் அறியமுடியும். பிறகு இன்னொரு சந்ததி வருகிறது, இப்படியாக வரிசையாக வந்து கொண்டிருக்கிறது.

**அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,** -எபிரேயர் 9:27

நாம் ஒரு தடவைதான் மரிக்கிறோம், அதன் பின்பு ஒரு தடவை நியாயத்தீர்ப்பு அடைகிறோம். இதை நினைவில் நன்றாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

**இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.**

- யோவான் 5:28,29.

ஆகவே மரித்தவர்கள் கல்லறையில்தான் இருக்கிறார்கள் என்று ஆண்டவர் இங்கு பிரேதகுழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்குங்காலம் வரும் என்று தெளிவாய் சொல்லுகிறார்.

**மனுஷன் படுத்துக்கிடக்கிறான் ; வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறதும் இல்லை, நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை. -யோபு** 14:12.

மனிதன் கல்லறையில் படுத்துக்கிடக்கிறான் என்று வேதம் சொல்லுகிறது.

**மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும். -ஏசாயா** 26:19.

-5-

மரித்தோர் மண்ணிலே தங்கியிருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

**இயேசு: கல்லுகளை எடுத்துப்போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்.இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்.**

-யோவான் 11:39,43,44.

இங்கு மரித்துபோன லாசருவை, இயேசு எழுப்பினபோது அவன் கல்லறையிலிருந்துதான் வெளியே வந்தான். வானத்திலிருந்து வரவில்லை. ஆகவே மரித்தவர்கள் கல்லறையில்தான் இருக்கி றார்கள் என்று வேதம் திட்டவட்டமாக சொல்லுகிறது.

**நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு; நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான்.**

-தானியேல் 12:13.

இங்கு தானியேலையும் நீ நாட்களின் முடிவிலே எழுந்திருப்பாய் என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே மரித்தவர்கள், ஆண்டவருடைய சத்தத்தை கேட்கும்போது, கடைசிநாளிலே எழுந்திருப்பார்கள். இந்த மரணத்தை ஆண்டவர் நித்திரை என்று சொல்லுகிறார்.

**என் தேவனாகிய கர்த்தாவே நீர் நோக்கிப்பார்த்து, எனக்குச் செவி கொடுத்தருளும்; நான் மரணநித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். -சங்கீதம் 13: 3.**

அப்படி அவர்கள் நித்திரையாக இருந்தால் அவர்களுக்கு நடப்பதென்ன என்று நாம் கேட்போமானால்

**உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும் அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்துபோயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை. -பிரசங்கி 9: 5, 6.**

**அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். -சங்கீதம் 146: 4.**

ஆகவே மனிதர்கள் மரித்தவுடனேயே, அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று வேதம் சொல்லுகிறது. மனிதர்கள் தாங்கள் மரித்தபிறகு தங்களுடைய ஆத்துமா இந்த உலகத்திலே அலைகிறது



என்று நம்புகின்றனர்.அதற்கு வேதம் என்ன சொல்லுகிறது?

**தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். -ஆதி. 2: 7.**

அவர் ஜீவசுவாசத்தை ஊதினபிறகு அவன் ஜீவாத்துமாவானான் என்று வேதம் சொல்லுகிறது.

**இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை. -பிரசங்கி 12: 7.**

இங்கு மனிதனின் உடல், மண்ணுக்கு போகிறதென்றும் அவன் ஆவி தேவனிடத்திற்கு போகிறதென்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் ஆத்துமா என்றால் ஜீவசுவாசமே ஆத்துமாவாக இருக்கிறது. அது ஆண்டவரிடத்திற்கே போய்விடுகிறது. ஆகவே ஆவியானது சரீரத்திற்குள் வந்தால்தான் நம் சரீரம் வேலை செய்யும். அந்த ஆவிக்கு பேசுவதற்கோ நினைப்பதற்கோ கிரியை செய்வதற்கோ அல்லது எந்த விதமான வேலையும் கிடையாது அது ஒரு கடவுளுடைய வல்லமையாக இருக்கிறது. ஆகவே மனிதன் மரித்தவுடனேயே அவன் ஆவி ஆண்டவரிடத்திற்கே போய் விடுகிறது என்று வேதம் சொல்லுகிறது. இப்படியிருக்க ஆண்டவர், நீ அந்த பழத்தை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று சொன்னார். ஆனால் பிசாசோ, நீங்கள் சாகவே சாவதில்லை என்று சொன்னான். அப்படியானால் இந்த மனிதனின் ஆத்துமா சாவாது என்று கொள்கையை ஏதேன் தோட்டத்திலேயே போதிக்கப்பட்டுவிட்டது. அவன் அந்த உபதேசத்தை நிருபித்துக்காட்ட அவன் தன்னுடைய தள்ளப்பட்ட தூதர்கள் மூலம், சில பெரிய வேலைகளை செய்கிறான்.

ஆண்டவர் நமக்கென்று ஒரு தேவதூதனை காப்பாலனாக நியமித்து வைத்திருக்கிறார். அதேபோல சாத்தானும் நமக்கென்று ஒரு தூதனை வைத்திருக்கிறான். அந்த சாத்தானுடைய தூதர்களுக்கு ஒரு வரம் உண்டு, அவர்கள் எந்த உருவத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். யாராவது ஒருவரின் உருவத்தை எடுத்துக் கொண்டு கனவிலாவது அல்லது நேரடியாக வந்து பேசுகிறான்.

இப்படியாக சாத்தான் தனது தேவதூதர்களிடத்திலே பல வகையான வித்தியாசமான வேலைகளை கொடுத்திருக்கிறான். ஒரு காலத்தில் பறக்கும் தட்டுகள் இந்த உலகத்திற்கு வந்து, வேறு சில மனிதர்களை போல காட்சிக்கொடுத்து, இன்னும் கொஞ்ச நாளிலே பதினோராயிரம் ராக்கெட்டுகளில் நாங்கள் இந்த உலகத்திற்கு வருவோம் என்று சொல்லி போனார்களாம். அவர்கள் யாவரும் பிசாசினுடைய தூதர்களே! இந்த உலகத்தில் படையெடுத்து வருவோம், வந்து



உங்களை அழித்து எங்களுடைய ராஜியத்தை நிலைநிறுத்துவோம் என்று பற்பல தந்திரமான வேலைகளை காண்பித்து மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இன்னும் சில பிசாசுகள், பல்வேறுவிதமான மார்க்கங்களிலே தங்களை தெய்வமாக காண்பித்துகொண்டு அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்துகொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப் படாதபடி தங்களுடைய பக்கத்தில் இழுத்து கொள்கிறார்கள்.

இன்னும் சிலவித பிசாசுகள், விஞ்ஞானத்தின் மூலமாகவே தெயவத்தின் உண்மையான படைப்புகளை குருடாக்கி வைத்திருக் கிறார்கள். உதாரணத்திற்கு, குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்று குரங்கையும் நம்மையும் பார்த்து சொல்லுகிறார்கள்.

இப்படியாக செத்தவர்கள் பேரிலே வந்து மக்களிடத்திலே பேசுகிற பிசாசுகளை பற்றி வேதத்திலே ஏராளமான இடங்களிலே சொல்லுகிறது.

**அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்கவேண்டியதல்லவோ? உயிருள்ளவர் களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?**
-ஏசாயா 8: 19.

அஞ்சனம் என்றால் நாள் பார்க்கிற காரியங்கள், நட்சத்திரங்களை பார்க்கிற காரியங்கள் குறி கேட்கிற காரியங்கள், மந்திர வித்தைகளை செய்கிற காரியங்கள், பில்லி சூனியம் செய்கிற காரியங்கள் செத்தவர்களிடத்திலே பேசுகிற காரியங்களே.

**மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்ட வைகளைச்செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்.**
-உபாகமம் 18: 11, 12.

இப்பேர்ப்பட்ட காரியங்கள்தான் மற்ற சில மார்க்கத்திலே விசேஷமாக நடக்கிறது. இப்படியே மரித்தவர்களோடும் உறவாடுகிறார்கள் இவைகளை நாம் செய்யும்போது கர்த்தருக்கு விரோதமாக நாம் வெகு தூரமாக சென்றுவிடுகிறோம்.

1848–ம் வருஷம் மார்ச் மாதம் 31–ம் தேதி மிஸ்டர் பாத்ஸ் என்றவர் நியூ–யார்க்கிலே வசித்து வந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். ஒரு இரவு, திடிரென்று கட்டிலை



பிடித்து இழப்பதும், சுவற்றிலேயும் மேசையிலேயும் தட்டுகிற சத்தமும் கேட்டது. அந்த பிள்ளைகளின் தகப்பனார் எழுந்து வந்து, என்ன சத்தம் என்று பார்த்து, யார் நீ? என்று கேட்கும் போதெல்லாம் அந்த தட்டுகிற சத்தம்தான் வருகிறது. அப்பொழுது அவர் என்னுடைய பெரிய மகளின் வயது என்ன என்றதற்கு 12 முறை தட்டினது. சின்ன மகளின் வயது என்ன எனறு கேட்டதற்கு 9 முறை தட்டினது.

பிறகு அந்த இரண்டு குழந்தைகளுக்கும் தங்கள் உடம்பிலே ஏதோ ஒரு சக்தி இறங்கி, பிறகு அவர்கள் மரித்தவர்களுடனே பேசினார்கள். அதன் பிறகு எல்லோருக்கும் அவர்கள் அவரவர்களின் மரித்த வர்களிடத்தில் பேச வைத்தார்கள். இப்படியாக அந்த 1848–லிருந்து இன்று வரை அதிகமாக இந்த உலகத்தில் மக்கள் மரித்தவர்களிடத்தில் பேசுகிறது பெரிதாகவிட்டது. இவைகள் யாவும் பிசாசுகளின் ஆவிகளே. அவர்களுக்கு வல்லமைகள் உண்டு என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடகூடாது.

கென்னடி சுட்டுக் கொள்ளப்படுவார் என்று ஜோசியம் சொன்னது. அதே போல அந்த அசுத்த ஆவி கென்னடியை அது சொன்னதுபோல சுட்டு கொன்றது. இப்படிதான் அந்த பிசாசுகள் மக்களை வஞ்சிக்கிறார்கள்.

ஆகவே மரித்தவர்கள் என்ன ஆவார்கள் என்று நாம் இங்கே ஆராய்ந்து பார்ப்பது அவசியம் . இயேசுவை நோக்கி:
**ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**
-லூக்கா 23: 42, 43.

அந்த கள்ளன் இறந்து கல்லறையில் இல்லை, அவன் பரலோகத்திற்கு போய்விட்டான் என்று சில கிறிஸ்தவ மார்க்கத்தார் பேசுகிறார்கள்.
இயேசு அவளை நோக்கி:
**என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் பாகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.**
-யோவான் 20: 17.

வெள்ளி கிழமை அந்த கள்ளனிடத்தில் நீ **இன்றைக்கு என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்** என்று இயேசு சொன்னார். ஆனால் உயிர்த்தெழுந்த பிறகு இயேசு, மரியாளிடத்திலே என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை என்று சொன்னார். இப்படியிருக்க அந்த கள்ளன் எப்படி இயேசுவோடு பரலோகத்திற்கு சென்றிருக்கமுடியும்? திருமறை ஆதியிலே எழுதப்



பட்டபோது புள்ளி காமா என்றெல்லாம் வைத்து எழதப்படவில்லை. இயேசு கள்ளனிடம் சொல்லும்போது **இன்றைக்கு நான் உனக்கு சொல்லுகிறேன் நீ என்னுடனேகூட பரதீசியிலிருப்பாய்** என்று சொன்னார். ஆகவே மொழி பெயர்க்கும்போது அந்த சிறு தவறு ஏற்பட்டுவிட்டது. பரதீசி என்றால் மத்திய ஆகாயத்தில் ஏதோ ஒரு இடம் இருக்கிறது, மரித்தவர்கள் அங்கே போய்விடுகிறார்கள் என்று சிலர்

சொல்லுகிறார்கள். இந்த கள்ளனும் அங்கேதான் போனான் என்றும் சொல்லுகிறார்கள்.

**கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்.** –2 கொரிந்தியர் 12:2 .

**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது.** -வெளி. 2: 7.


ஜீவ விருட்சத்தின் கனி எங்கேயிருக்கிறது?

**நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.** -வெளி. 22: 2.

இங்கு புதிய எருசலேமே பற்றி ஆண்டவர் சொல்லுகிறார். ஆகவே புதிய எருசலேம் பரலோகத்தில் இருக்கிறது. பரதீசும் பரலோகமும் ஒரே அர்த்தத்தைதான் குறிக்கிறது.

ஆகவே இந்த உலகத்தில் அநேக வஞ்சகமான ஆவிகள் நம்மை பலவழிகளில் ஆண்டவரிடத்தில் பிரித்து நம்மை பரலோகத்திற்கு போகசெய்யாமல் தடுக்கிறது. அவைகளின் தந்திரமானச் செயல்களை நாம் ஜெபத்திலே வைத்து, நம்மை ஆண்டவரின் உதவியோடு பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இந்த உலகமே பொல்லாத ஆவி உலகமாயிருக்கிறபடியால் தேவன் நம்மை யாவரையும் பாதுகாத்து வழி நடத்தி இரட்சிப்பார்.

ஆமென்.




**சில ஆதாரங்கள்**



இங்கிருந்துதான் இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்து செல்லப்பட்டார்.